# நாகொடை பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 நவம்பர் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாகொடை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 22,785 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 137,642 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவினமாகக் காண்பிக்கப்படாமல் நடைமுறைச் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 46,267 தொகையான 03 இரும்பு அலுமாரிகளின் பெறுமதி தவிர ரூபா 91,375 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 114 | 2,177 | 223 |
| (ii) | வாடகை | 2,266 | - | 28,909 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 486 | 575 | |
| (iv) | ஏனைய வருமானம் | 3,475 | 4,807 | |

### 2.2.2 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்கு அறவிடவேண்டிய ரூபா 223,118 தொகையான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

உள்ளவாறு அதன் மீதி ரூபா 15,000 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போதிலும் அக் கணக்கை மூடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு படிகளைச் செலுத்துவது தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 2006 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2011 ஆம் ஆண்டின் போது மாதாந்த சபைக் கூட்டத்திற்காக சமுகமளிக்காமைக்கு வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்காத 07 உறுப்பினர்களுக்கு மாதாந்த சபைக் கூட்டத்திற்கான கொடுப்பனவாக ரூபா 41,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் 06 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காகக் கிடைத்த ரூபா 347,741 தொகை உரிய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2013 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் வேலைக் கணக்கில் செயற்பாடற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்